தமிழக அரசின் "நான் முதல்வன் திட்டம் மூலம் படித்து குடிமைப் பணித் தேர்வான ஐ.ஏ.எஸ் தேர்வில் தமிழக அளவில் 7வது இடம் பிடித்த சின்னாளபட்டியைச் சேர்ந்த மாணவர் அருண்பாண்டியன், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். அருகில் அருண்பாண்டியன் பெற்றோர் நடராஜன் – தமிழ்ச்செல்வி ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாட்டில் மின் வாகன உதிரிபாகங்களின் உற்பத்தியை அதிகரிக்க

ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மக்களவையில் – தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச். 27 -

தமிழ்நாட்டில் மின் வாகனங்களுக்கான மின் சக்தி பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து அதனை வணிக பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காகவும் EV பவர் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி பொருட்களுக்கான பாதுகாப்பு வசதி களை நிறுவு வதற்காகவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று மக்களவையில் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சருக்கு கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரு மான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

சென்னையில் அறிமுகப் படுத்தப்பட்ட, மின்வாகனங்க ளில் ஒருங்கிணைந்த இயக்க சக்தியினை கொடுக்கும் (Integrated Drive System) அதிகமான வெப்பநிலையிலும் சீராக செயல்படும் திறன் கொண்ட 30 கிலோ வாட் வைட் பேண்ட் கேப் உற்பத்தியை அதிகரிக்கவும் அதனை வணிக ரீதியிலான பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குமான செயல் திட்டத்தை ஒன்றிய அரசு வகுத்துள்ளதா?

அப்படியெனில் இந்தத் திட்டத்திற்காக மின்சக்தி மின்னணுவியல் தொழில் நுட்பத்திற்கான தேசிய இயக்கத்தின் கீழ் (NaMPET) ஐஐடி மெட்ராஸ் மற்றும் CDAC எனப்படும் மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையம் உள்ளிட்டவற்றுக்கு வழங்கப்பட்ட நிதி குறித்த விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் வாகன உதிரிபாகங்களுக்கான வலுவான தானியங்கி தயாரிப்பு நிறுவனங்கள் உள்ளதால், மின்னணுவியல் உற்பத்தி பொருட்களுக்கான பாதுகாப்பு வசதி கொண்ட தொழில் பூங்காக்களை நிறுவ திட்ட மிடப்பட்டுள்ளதா? திட்ட மிருப்பின் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) இத்தொழில்நுட்பத்தால் பயனடைவதற்கு ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மேலும் தமிழ்நாட்டில் உள்ளூர் EV பவர் எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியை அதிகரித்து, முக்கிய உதிரிபாகங்களுக்கான இறக்குமதி சார்புநிலையை குறைக்கும் வகையில், ஊக்கத்தொகைகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மானியங்கள் அல்லது உள்கட்டமைப்பு வசதிகளை வழங்க ஒன்றிய அரசு முன்வருமா?

இவ்வாறு தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் சார்பில் – கனடா எழுத்தாளர்

கவிஞர் வீணை மைந்தனுக்கு வரவேற்பு! பெருங்கவிக்கோ உரையரங்கம்!

வா.மு.சே. திருவள்ளுவர் தலைமை! கவிஞர் வீணை மைந்தன் சிறப்புரை!

சென்னை, மார்ச் 27-

பன்னாட்டு தமிழுறவு மன்றம் சார்பில் - கனடா எழுத்தாளர் கவிஞர் வீணை மைந்தனுக்கு வரவேற்பு மற்றும் கனடாவில் பெருங்கவிக்கோ உரையரங்கம் நாளை (28.3.2026) மாலை 5.30 மணியளவில் வடபழனி அஞ்சலகம் எதிரில் உள்ள அண்ணா நூலகத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் செம்மொழி சா.மணிவண்ணன் வரவேற்கிறார். வழக்கறிஞர்கள் கிருட்டிணமூர்த்தி, சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுக்கு தமிழ் மாமணி வா.மு.சே. திருவள்ளுவர் தலைமை வகிக்கிறார்.

கவிஞர் வீணை மைந்தன் சிறப்புரையாற்று கிறார். கவிஞர் காவிரி மைந்தன் வாழ்த்துரை வழங்குகிறார். தில்லை பாட்கர் தொகுப்புரையாற்றுகிறார்.

கவிச்சிங்கம் கண்மதியன் தலைமையில் நடைபெறும் கவியரங்கத்தில் கவிஞர்கள் 16 வரிகளுக்குள் கவி பாடுவர்.

கவிஞர் மூ.வீரமுத்து நன்றி கூறுகிறார்.

நயினார் நாகேந்திரன் மீது வழக்குப் பதிவு செய்ய

அமலாக்கத்துறைக்கு உத்தரவிடுக!

சென்னை உயர்நீதி மன்றத்தில் தி.மு.க. மனு!

சென்னை, மார்ச்.27–

2024 மக்களவை தேர்தலின் போது நான்கு கோடி ரூபாய் பணம் கைப்பற்றப்பட்ட விவகாரத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் மீது வழக்குப்பதிவு செய்ய அமலாக்கத்துறைக்கு உத்தரவிடக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலின் போது, தாம்பரம் ரயில் நிலையத்தில் நெல்லை செல்லும் விரைவு ரயிலில் நான்கு கோடி ரூபாய் பணத்தை தேர்தல் ஆணையம் கைப்பற்றியது. திருநெல்வேலி மக்களவை தொகுதியில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன், அவரது தொகுதியில் பணப்பட்டுவாடாவில் ஈடுபட, இந்த பணம் கொண்டு செல்லப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில், 4 கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்ட விவகாரத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், தமிழ்நாடு பா.ஜ.க.வின் முன்னாள் அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்ய அமலாக்கத்துறைக்கு உத்தரவிடக்கோரி மாநிலங்களவை தி.மு.க. உறுப்பினர் கிரிராஜன், சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த விவகாரத்தில் நயினார் நாகேந்திரன், கேசவ விநாயகம் ஆகியோர் மீது சி.பி.சி.ஐ.டி. வழக்குப்பதிவு செய்துள்ளதை மனுவில் குறிப்பிட்டுள்ளார். மூல வழக்குப்பதிவு செய்தும் இந்த விவகாரத்தில் அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்யவில்லை என்றும், நயினார் நாகேந்திரனும், கேசவ விநாயகமும் பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் என்பவதால் அமலாக்கத் துறை நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (25-3-2026) பத்திரிகையாளர் ரவீந்திரன் துரைசாமி அவர்களின் தந்தை ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் மறைவடைந்ததையடுத்து அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த திருவுடலுக்கு மாலை அணிவித்து, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், வட்டக் கழக செயலாளர் கோவிந்தராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்டம் தி.மு.க. கிழக்கு தொகுதி கழக செயல்வீரர்கள் கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.கோபாலகிருஷ்ணன், மாவட்ட அவைத்தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் சோம சுந்தர பாண்டியன், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் நேருபாண்டியன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆசைக்கண்ணன், ரோகினி பொம்ம தேவன், ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், மதிவாணன், ஹக்கிம், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், மருதுபாண்டியன், பாண்டியராஜா, கவுரிசங்கர், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அண்ணாமலை, வீரராகவன், மீராஜான், விநோத், மருதுராஜா, ராஜவேல், மாநகராட்சி கொரடா துரைப்பாண்டியன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட

நோயாளிகளின் பாதுகாப்பிற்கு அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 27 -

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 24 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் உரிமையைப் பாதுகாக்க, ஒன்றிய அரசிடம் ஏதேனும் நடவடிக்கைள் உள்ளனவா? என்றும் அதற்கான சுகாதார கட்டமைப்புகளை பலப்படுத்த முன்முயற்சிகள் எடுக்கப் படுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

ஒவ்வொரு ஆண்டும் சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்ற தேவையான தொழில்நுட்ப உதவிகளையும், நிதி உதவிகளையும் மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது என்றும், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறியும் ஆஷா என்ற அமைப்பின் உதவியுடன் அவர்களுக்கான கண்காணிப்பும் மருத்து வசதிகளையும் மாநில அரசின் உதவியுடன் அளிக்கப்படுகிறது என்றும், சிறப்பு விழிப்புணர்வு முகாம்கள் கடந்த 2017ம் ஆண்டு முதலாக நடத்தப்பட்டு வருகின்றன என்றும், ஆயுஷ்மான் ஆரோக்ய மந்திர் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து மாவட்ட அளவிலான தொழுநோய் தடுப்பு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடு;த்து வருகிறது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும் திறன் மேம்பாட்டு திட்டங்களும், பயிற்சி வகுப்புகளின் மூலமும், மருத்துவ துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றும், தொழுநோயை கண்டறியவும், அவர்களுக்கு தேவையான மருத்து உதவிகளை உரிய நேரத்தில் வழங்கிடவும் தேவையான முயற்சிகளை ஒன்றிய அரசு மாநில ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் இணைந்து மாவட்ட அளவில் அனைத்து நடவடிக்கைகளையும் தொழில் நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து மேற்கொண்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

புல்லட் ரயில் அறிவிப்பில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு!

ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கிற்கு தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள்!

கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 27-

தமிழ்நாடு உட்பட நாடு முழுக்க அறிவிக்கப்பட்டுள்ள புல்லட் ரயில் திட்டங்களின் முக்கிய விவரங்களைக் கேட்டு, நாடாளு மன்றத்தில் ரயில்வே அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதற்கு கிடைத்திருக்கும் பதில்கள், தமிழ் நாட்டின் தேவைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

மஹாராஷ்டிரா, குஜராத், உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு அதிக முக்கி யத்துவம் கொடுக்கப்படும் நிலையில், நாட்டிற்கு அதிக வரித்தொகையை செலுத்தும் தமிழ்நாடு இப்படி புறக்கணிக்கப் பட்டிருப்பது, ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரத்தையும் தமிழ் மக்களின் மீதான பாரபட்சத்தையும் காட்டுகிறது.

1. ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு மீது தொடரும் பாரபட்சம்:

ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு புறக்கணிக்கப் படுவது புதிய விவகாரம் அல்ல. இந்த ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு மொத்தமாகவே 7000 கோடி ரூபாய் என்ற குறைவான தொகையே ஒதுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் சார்பில் முன்வைக்கப்பட்ட புதிய ரயில் வழித்தடங்கள், ஏற்கனவே இருக்கும் வழித்தடங்களில் கூடுதல் ரயில்கள், ரயில் நிலையங்களின் மேம்பாடு போன்ற பல முக்கியக் கோரிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன.

எனது தொகுதியான ஈரோட்டின் ரயில்வே தேவைகள் குறித்து, ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகிறேன்.

இவற்றில் தொடர் அழுத்தத்திற்கு பணிந்து சில கோரிக்கைகளை ஒன்றிய அரசு நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட நிலையில், பல கோரிக்கைகள் இன்னும் கவனத்தில் கொள்ளப்படாமலேயே இருக்கின்றன.

இதன் அடுத்தகட்டமாக, புல்லட் ரயில் திட்டங்களிலும் தமிழ்நாட்டின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

2. மகாராஷ்டிராவிற்கு ஒரு நியாயம், தமிழ்நாட்டிற்கு ஒரு நியாயமா?

மஹாராஷ்டிராவில் ஏற்கனவே மும்பை அகமதாபாத் புல்லட் ரயில் சேவை பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தற்போது மும்பை புனே புல்லட் ரயிலும் அந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக புல்லட் ரயிலில் Interstate தன்மைக்கே முன்னுரிமை அளிக்கப்படும் சூழலில், மஹாராஷ்டிராவிற்கு மட்டும் அந்த விதி தளர்த்தப்பட்டு Intrastate ரயில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களின் முக்கிய நகரங்களை இணைக்க, பல ஆண்டுகளாக புல்லட் ரயில்கள் கேட்கப்பட்டு வருகின்றன. ஆனால், இது பற்றி எந்த அக்கறையும் காட்டாமல், மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு அனைத்தையும் ஒதுக்கி, தமிழ் நாட்டை கைவிட்டிருக்கிறது ஒன்றிய அரசு.

3. முதலமைச்சரின் தலைமையில் 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்':

தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில், தமிழ் நாடு மாநிலம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி நடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஜிடிபி, தனி நபர் வருமானம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து அலகுகளிலும் அவரது சாதனைகள் வரலாற்றை மாற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன. இதற்கு ஊடகங்களும், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், ஒன்றிய அமைச்சகங்களும் வெளியிடும் தரவுகளே சாட்சி.

ஒன்றிய அரசின் எதேச்சதிகாரத்தை முறியடித்து தமிழ்நாட்டிற்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்வதில் புகழ்பெற்ற அவர், ரயில்வே திட்டங்களிலும் ஒன்றுவிடாமல் கொண்டு வந்து சேர்ப்பார். அவர் தலைமையில் "தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்".

வரும் தேர்தலில், தமிழ் நாட்டை புறக்கணித்து மகிழும் ஒன்றிய பா.ஜ.க அரசிற்கு தக்க பாடம் புகட்டுவோம்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.